# நேர்வழி எது?

## அல்லாஹ்(ஜல்)வே கூறுகின்றான்!

1. உங்களுக்காக உங்கள் இறைவனால் அருளப்பட்டதையே பின்பற்றுங்கள். அவனையன்றி மற்றவர்களைப் பாதுகாவலர்களாக்கிப் பின்பற்றாதீர்கள். நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவது வெகு சொற்பமே.

*அல்குர்ஆன் 7:3*

2. அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றி கட்டளையிட்டு விட்டால், அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்ள, ஈமான் கொண்ட எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமை இல்லை. ஆகவே அல்லாஹ்வுக்கும், ரசூலுக்கும் எவரேனும் மாறு செய்தால், நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். *அல்குர்ஆன் 33:36*

3. அல்லாஹ்வுடைய தூதர் எவற்றைக் கொடுத்தாரோ அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். எவற்றைத் தடுத்தாரோ அவற்றைத் தடுத்துக் கொள்ளுங்கள். *அல்குர்ஆன் 59:7*

4. நெருப்பில் அவர்கள் முகங்கள் புரட்டப்படும் அந்நாளில் 'ஆ! கைசேதமே. அல்லாஹ்வுக்கு வழிபட்டிருக்க வேண்டுமே, ரசூலுக்கு வழிப்பட்டிருக்க வேண்டுமே, எங்கள் ரப்பே நிச்சயமாக நாங்கள் எங்கள் செய்யிது (தலைவர்)களுக்கும், அகாபிரீன்(பெரியார்)களுக்கும் வழிபட்டோம். அவர்கள் எங்களை வழிகெடுத்து விட்டார்கள். எங்கள் ரப்பே! அவர்களுக்கு இருமடங்கு வேதனையைக் கொடுத்து, அவர்களைப் பெரும் சாபத்தைக்கொண்டு சபிப்பாயாக என்று கதறுவார்கள்.

*அல்குர்ஆன் 33:66,67,68*

5. நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள் இன்னும் தூதருக்கும், உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள். உங்களுக்குள் பிணக்கு ஏற்படுமானால், மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புகிறவர்களாக இருப்பின் அல்லாஹ்விடமும், தூதரிடமும் திரும்புங்கள். இதுதான் மிகவும் சிறப்பான அழகான முடிவாக இருக்கும்.

*அல்குர்ஆன் 4:59*

6. ‘‘அல்லாஹ் இறக்கிவைத்த இதைப் பின்பற்றுங்கள்’’ என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் “அப்படியல்ல! எங்கள் மூதாதையர்கள் எந்த வழியில் நடக்கக்கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்’’ என்று கூறுகிறார்கள். என்ன? அவர்கள் மூதாதையர் எதையும் விளங்காதவர் களாகவும், நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா?”

*அல்குர்ஆன் 2:170*

7. அவர்கள் அல்லாஹ்வை விட்டு, தம் பண்டிதர் களையும், குருக்களையும், மஸீஹ் இப்னு மர்யத்தையும் தெய்வங்களாக்கிக் கொண்டனர். ஆனால் அவர்கள் ஒரே இறைவனைத் தவிர வேரெவரையும் வணங்கக் கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளனர். அவனையன்றி வேறு தெய்வமில்லை. அவர்கள் இணை வைப்பதை விட் டும் இறைவன் மகா பரிசுத்தமானவன். *அல்குர்ஆன் 9:31*

வேதத்தையுடையவர்கள் பண்டிதர்களையும், குருக் களையும் வணங்கவில்லை ஆனால் அவர்கள் அனுமதித் ததைச் செய்தார்கள் தடுத்ததைத் தடுத்துக் கொண்டார் கள் (அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாக இருந்த போதிலும் சரியே) என நபி(ஸல்) அவர்கள் விளக்கம் கொடுத்தனர். *நூல் : திர்மிதீ*

8. ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாகப் பண்டிதர் களிலும், குருக்களிலும் அநேகர் மக்களின் சொத்துக் களைத் தவறான முறையில் சாப்பிடுகின்றனர். மேலும் அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுக்கிறார் கள். *அல்குர்ஆன் 9:34*

9. இப்புவியில் இருப்போரில் அநேகரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து திருப்பி விடுவார்கள். வெறும் யூகங்களைத் தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை அன்றி கற்பனைகளில்தான் அவர்கள் மூழ்கி இருக்கின்றனர்.

*அல்குர்ஆன் 6:116*

**10.** எவர்கள் தங்களுடைய மார்க்கத்தைப் பிரித்துப் பல பிரிவினைகளாகப் பிரிந்து விட்டனரோ, அவர்களுடன் உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடம் உள்ளது. அவர்கள் செய்து கொண்டிருந்த வற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான். அல்குர்ஆன் **6:159**

**11.** அல்லாஹ் இறக்கி வைத்ததைக்கொண்டு எவர் தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் காஃபிர்கள், அநியாயக் காரர்கள், பாவிகள். *அல்குர்ஆன் 5:44,45,47*

இந்த வசனங்கள் ஓதப்படும்போது, ஒருவர் இவை இஸ்ரவேலருக்கு என்றார். ஹுதைபா(ரழி) கோபத்துடன் "அல்லாஹ் அருளியவற்றைக் கொண்டு அவர்கள் தீர்ப்பளிக்காவிட்டால் காஃபிர்கள், அநியாயக்காரர்கள், பாவிகள் அப்படியானால் நீங்கள் அதே குற்றத்தைச் செய்து கொண்டு எப்படி முஸ்லிம்களாக இருக்க முடியும்?" என்று கேட்டார்.

**12.** அவர்கள் தங்கள் மார்க்கத்தில் பிரிவினைகளை உண்டாக்கிப் (பல) பிரிவுகளாகப் பிரிந்து விட்டனர். ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடமிருப்பதைக் கொண்டே மகிழ் வடைகிறார்கள். *அல்குர்ஆன் 30:32*

**13.** அல்லாஹ்வுக்கல்லாது ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் (எவருக்கும்) இல்லை. *அல்குர்ஆன் 6:57*

**14.** மார்க்கம் பற்றி அல்லாஹ்வுக்கு நீங்கள் கற்றுக்கொடுக்க முற்படுகிறீர்களா? அவனோ வானங்களி லுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் அணு அணுவாக அறிகிறான். *அல்குர்ஆன் 49:16*

**15.** நிச்சயமாக அல்லாஹ் இந்நெறிநூலை உண்மையுடன் அருள் செய்தான், இந்நெறிநூலில் மாறு பாட்டை உண்டாக்க முனைவோர் பெரும் பிளவிலேயே இருக்கிறார்கள். *அல்குர்ஆன் 2:176*

**16.** எவனொருவன் நேர்வழி இன்னதென்று தெளி வான பின்னரும் தூதரைவிட்டுப் பிரிந்து, மூஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் வழியில் செல்லவிட்டு நரகத்தில் அவனை நுழையச் செய்வோம். அதுவோ செல்லுமிடங்களில்

மிகவும் கெட்டதாகும். *அல்குர்ஆன் 4:115*

17. மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். அல்லாஹ் நன்மாராயங் கூறுவோராகவும், எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பிவைத்தான். மனிதர்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைக்க அவர்களுடன் உண்மையுடைய நெறிநூல்களையும் இறக்கி வைத்தான். எனினும் நெறிநூல் கொடுக்கப்பட்டவர்கள், தெளிவான ஆதாரங்களும், அத்தாட்சிகளும் வந்த பின்னரும் தம்மிடையே உண்டான பொறாமையின் காரண மாக மாறுபட்டார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்த உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர்வழி காட்டினான். இவ்வாறே அல்லாஹ்தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகிறான். *அல்குர்ஆன் 2:213*

18. (நபியே!) நம் வசனங்களைப்பற்றி வீண்வாதம் செய்து கொண்டிருப்போரை நீர் கண்டால் அவர்கள் அதைவிட்டு வேறு விஷயங்களில் கவனம் செலுத்தும் வரை நீர் அவர்களைப் புறக்கணித்து விடும். ஷைத்தான் உம்மை மறக்கும்படி செய்துவிட்டால், நினைவு வந்ததும் அந்த அநியாயக்காரக் கூட்டத்தினருடன் நீர் அமர்ந் திருக்க வேண்டாம். *அல்குர்ஆன் 6:68*

19. (இறைவனிடமிருந்து) தங்களுக்கு வந்த யாதொரு ஆதாரமுமின்றி அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றி தர்க்கம் செய்வது, அல்லாஹ்விடத்திலும் ஈமான் கொண்டோரிடத்திலும் மிகவும் வெறுக்கப்பட்டதாகும். இவ்வாறே பெருமையடித்து ஆணவம் கொள்ளும் ஒவ்வோர் இருதயத்தின் மீதும் அல்லாஹ் முத்திரை யிட்டு விடுகின்றான். *அல்குர்ஆன் 40:37*

20. மனிதர்களில் சிலர் இருக்கின்றனர் அவர்கள் அறிவில்லாமல் வீணானவற்றை விலைக்கு வாங்கி, அவற்றால் மக்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழிகெடுக்கவும், பரிகாசமாக்கிக் கொள்ளவும் முயல்கிறார் கள். இத்தகையோருக்கு மகத்தான வேதனையுண்டு. *அல்குர்ஆன் 31:6*

21. நீங்கள் அறிந்துகொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள். *அல்குர்ஆன் 2:42*

**22.** எவர்கள் அல்லாஹ் நெறிநூலில் அருளிய வற்றை மறைத்து அதற்குக் கிரயமாகச் சொற்பத்தைப் பெற்றுக் கொள்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர வேறெதனையும் உட் கொள்ளவில்லை. கியாம நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும் மாட்டான். அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையுண்டு. *அல்குர்ஆன் 2:174*

மத்ஹபுகள், மார்க்கத்தில் மனித அபிப்பிராயங்கள், தக்லீத் (கண்மூடிப் பின்பற்றல்) கூடாது என்பதற்கு இன்னும் பல இறைவசனங்களைக் காட்ட முடியும். நம்மில் பலர் இந்த இறைவனசங்கள் முன் சென்ற மக்களுக் குரியது. எங்களுக்கு இல்லை என்று மனப்பால் குடிக்கின்றனர். நாம் அவர்களிடம் கேட்கிறோம். நமக்குத் தேவையில்லாததை அதுவும் அவர்களின் குறைகளைப் பற்றி அல்லாஹ் நமக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன?

''நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு, ஆண்களிடம் காம இச்சையைத் தணித்துக்கொள்ளச் செல்கிறீர்கள், என்னே! நீங்கள் மிக்க வரம்பு மீறிய மக்களாக இருக்கிறீர்கள். *அல்குர்ஆன் 7:81*

இது லூத்(அலை) மக்கள் பற்றிய வசனம், எங்களுக்கில்லை, எங்களுக்கு இந்தச் செயல் 'ஹலால்' என்று சொல்வார்களா? முன் சென்ற மக்களின் தவறுகளை அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுவது, அந்தத் தவறுகளை நாமும் செய்யக்கூடாது என்பதற்காகவே. இது எங்கள் யூகம் இல்லை. அல்லாஹ்வே கூறுகின்றான். ''அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்கு நல்ல படிப்பினை இருக்கிறது. *அல்குர்ஆன் 12:111*

ஆக முன் சென்ற மக்கள் தக்லீத் (கண்மூடிப் பின்பற்றல்) செய்ததை அல்லாஹ் கண்டிக்கிறான் என் றால், நாமும் 'தக்லீத்' செய்யக்கூடாது என்பதே பொரு ளாகும். நல்லவர்களைத் தக்லீத் செய்யலாம் என்று சொல் கிறார்கள். அதுவும் தவறு. காரணம் நல்லவர், கெட்ட வர்களை அல்லாஹ்வே மிகச் சரியாக அறிவான். மனிதர்

களால் அறிய முடியாது. முன் சென்ற மக்கள் தங்கள் செய்யிது (தலைவர்)கள் அகாபிரீன் (பெரியார்)கள் ஆகிய நல்லவர்களைத் தான் 'தக்லீத்' செய்தார்கள் என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான்(33:67). குர்ஆனில் 'தக்லீத்' குர்பானி செய்யப்படும் மிருகங்களுடன் இணைத்துச் சொல்லப்பட்டிருக்கிறதேயல்லாமல் முஸ்லிம்களுடன் இணைத்துச் சொல்லப்படவில்லை(5:2,97). ஆக பகுத்தறிவற்ற விலங்குகளுக்குரிய தக்லீதை பகுத்தறிவுள்ள மனிதர்கள் ஏற்கக்கூடாது என்பது குர்ஆனைக் கொண்டு, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிந்த ஒரு கருத்தாக இருக்கின்றது.

குர்ஆன் வசனங்களை மக்கள் புரிய முடியாது அறிஞர்கள் மட்டுமே அதற்கு விளக்கம் தரமுடியும் என்று கூறுவது, அல்லாஹ்மீதும், குர்ஆன்மீது சொல்லப்படும் ஒரு பெரிய பழிச்சொல்லாகும். குர்ஆனில் அதற்கு ஒரு ஆதாரமுமில்லை. குர்ஆன் தெளிவானது எளிதானது. மனிதனது பலஹீனம் கருதியே அது மிகவும் இலேசாக்கப்பட்டது என்பதற்கு நூற்றுக்கணக்கான வசனங்களைக் காட்ட முடியும் (4:28, 54:17,22,32,40) குர்ஆனை அறிஞர்கள் எளிதாக்குகின்றனர் என்றால் நவூதுபில்லாஹ்! அல்லாஹ்வுக்கு இல்லாத ஆற்றல் அறிஞர்களுக்கு உண்டு என்றல்லவா பொருள் படுகிறது. ஷிர்க்கின் எல்லைக்கே போய் விடுகின்றதே? மிகத்தெள்ளத் தெளிவான வசனங்களை இறக்கி, நபி(ஸல்) அவர்கள் மூலம் குழந்தைகளுக்கு அரிச்சுவடி கற்றுக்கொடுப்பதுபோல், தெள்ளத்தெளிவான செயல்முறைகளிலே செய்து காட்டிய பின்னும், இன்னும் தெளிவுபடுத்த 'இமாம்கள்' தேவை என்று சொல்லுபவர்கள் அல்லாஹ், ரசூலுக்கு முடியாமல் போனதை இமாம்கள் செய்திருக்கிறார்கள் என்று தானே நம்பிக்கை கொள்ள முடியும்? இந்த நம்பிக்கை சரிதானா? மத்ஹபுகள் கூடாது என்பதற்குப் பல இறை வசனங்களைக் காட்டிவிட்டோம். அவை ஆகும் என்று சொல்லுபவர்கள் தங்கள் யூகங்கள், கற்பனைக் கட்டுக் கதைகள், கனவுக் காட்சிகள் இவற்றை ஆதாரமாகத் தருவதை விட்டுவிட்டு. ஒரு சில இறை வசனங்களையாவது முன்வைக்கட்டும். நாங்கள் அவற்றை பரிசீலனை செய்யக்காத்திருக்கிறோம். அடுத்து 'தக்லீத்' பற்றி நபி(ஸல்) என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்

**1. வார்த்தையில் சிறந்தது அல்லாஹ்(ஜல்)வின் நெறிநூல். நடை முறையில் சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களின் நடைமுறை, காரியங்களில் கெட்டது (நபி(ஸல்) அவர்களின் சொல், செயல் அங்கீகாரம் இல்லாத) பித்அத்துகள். பித்அத்துகள் அனைத்தும் வழிகேடுகள். வழிகேடுகள் அனைத்தும் நரகில் சேர்க்கும்.**

*அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத்(ரழி), நூல் : புகாரீ, முஸ்லிம்*

*அறிவிப்பவர் : ஜாபிர்(ரழி), நூல் : நஸயீ*

**2. உங்களிடையே இரண்டை விட்டுச் செல்லுகிறேன். அவற்றை பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்(ஜல்)வின் நெறிநூல் இரண்டு எனது வழிமுறை.**

*அறிவிப்பவர் : மாலிக் இப்னு அனஸ்(ரழி), நூல் : முஅத்தா*

**3. எனது உம்மத்தில் 73 பிரிவினர் தோன்றுவர். 72 பிரிவினர் நரகம் புகுவர். ஒரு பிரிவு மட்டுமே சொர்க்கம் செல்லும். அவர்கள் நானும் எனது தோழர்களும் எவ்வாறு நடக்கிறோமோ அவ்வாறே நடப்பவர்கள்.**

*அறிவிப்பவர் : முஆவியா(ரழி) அம்ரு இப்னு ஆஸ்(ரழி),*


*நூல்கள் : அபூதாவூது, திர்மிதீ*

***(சொர்க்கம் செல்வது 1பிரிவு மட்டுமே. நான்கோ, ஏழோ அல்ல)***

**4. நிச்சயமாக, நான் வழிகெடுக்கும் தலைவர்களைப் பற்றித்தான் என் சமூகத்தினர் மீது அச்சமுறுகிறேன்..... மேலும் என் சமூகத்தினரில் ஒரு கூட்டத்தினர் எப்பொழுதும் உண்மை மார்க்கத்தின் மீது நிலைத்திருப்பர். அவர்களுக்கு மாறுபடுபவர் களுடைய தீங்கு அவர்களை ஒன்றும் செய்து விடாது. கியாம நாள் வரை அவர்கள் நிலைத்திருப்பர்.**

*அறிவிப்பவர் : ஸவ்பான்(ரழி), நூல்கள் : முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி (இவர்கள் ஹதீஸ்களின்படி நடப்பவர்கள் என்று அலிய்யுப்னுல் மதனிய்யி கூறியுள்ளனர், இதன் வாசகம் ரஜீனில் உள்ளது)*

**5.** நாங்கள் நபி(ஸல்) அவர்களோடு இருந்தோம். அவர்கள் கீழே ஒரு நேர்க்கோடு போட்டார்கள். அதன் வலப் பக்கம் இரண்டு கோடுகளையும், இடப் பக்கம் இரண்டு கோடுகளையும் இட்டனர். பின்னர் நடுவிலுள்ள நேர்க் கோட்டில் கையை வைத்துக்கொண்டு சொன்னார்கள், **"இதுவே அல்லாஹ்வின் நேர்வழியாகும்"** என்றனர்.




பின்னர் இந்த ஆயத்தை ஓதினார்கள்.

**"நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும், இதனையே பின்பற்றுங் கள். இதர வழிகளைப் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை அவனுடைய வழியை விட்டும் பிரித்து விடும். நீங்கள் பயபக்தியுடைய வர்களாக ஆவதற்கு இவ்வாறு அவன் உங்களுக்குப் போதிக் கின்றான்."**

*அல்குர்ஆன் 6:153*

(இந்த ஆயத், ஹதீஸின்படி நேர்வழி ஒன்றே ஒன்றுதான் நான்கு அல்லது ஏழு வழிகளல்ல என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.)

**6.** முதஷாபிஹாத்பல பொருள் கொண்ட இறைவசனங்கள். ஆயத்துக்களின் முடிவான ஒரே பொருளை அல்லாஹ்(ஜல்) மட்டுமே அறிவான் எந்த ஆலிமும் அறிய முடியாது (3:7) **''முதஷாபிஹாத் வசனங்களில் குதர்க்கம் புரிபவர்களை நீங்கள் காணின் இவர்கள்தான் குழப்பவாதிகள் இவர்களைப்பற்றித்தான் இறைவன் இந்த 3:7 வசனத்தில் கூறியிருக்கின்றான் என்று அறிந்து, அவர்களைப்பற்றி நீங்கள் எச்சரிக்கையாயிருந்து கொள்ளுங்கள்''** என்று நபி(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். (பீ.ஜை பற்றிய நபி(ஸல்) அவர்களின் முன் அறிவிப்பு) *அறிவிப்பவர் :* ஆயிஷா(ரழி), *நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அபுதாவூத், திர்மிதீ*

**7. உமர்(ரழி), நபி(ஸல்) அவர்களிடம் தௌராத்தின் ஒரு பிரதியைக்கொண்டு வந்து, யாரசூலுல்லாஹ் இது தௌராத்தின் ஒரு பிரதி என்றனர். நபி(ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தனர். உமர்(ரழி) அதனைப்படிக்க**

ஆரம்பித்தனர். நபி(ஸல்) அவர்களின் முகம் கோபத்தால் மாறியது. உடனே அபூபக்கர்(ரழி) வழிகெடுப்பவர்கள், உம்மை வழி கெடுத்துவிட்டனர். நபி(ஸல்) அவர்களின் முகத்தைப்பாரும் என்றனர். உமர்(ரழி), நபி(ஸல்) அவர்களின் முகத்தைப் பார்த்து, நான் அல்லாஹ்வின் கோபத்தை விட்டும் ரசூலின் கோபத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன் நான் அல்லாஹ்வை ரப்பாகவும், இஸ்லாத்தைத் தீனாகவும், முஹம்மது(ஸல்) அவர்களை நபியாகவும் பொருந்திக் கொண்டேன் என்று கூறினர். பின்னர் நபி(ஸல்) அவர்கள் சந்தேகமில்லாமல் நான் உங்களிடம் பிரகாசமுள்ள தெள்ளத் தெளிவான ஷரீ அத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எந்த இறைவனிடம் இந்த முஹம்மதின் உயிர் இருக்கிறதோ, அந்த இறைவன் மீது ஆணையாக, இப்போது மூஸா(அலை) உங்களிடம் வந்து நீங்கள் அவரைப் பின்பற்றினால் நீங்கள் வழி தவறியவராவீர்கள். அந்த மூஸா(அலை) இப்போது இருந்தால் என்னைப் பின்பற்றுவதை விட்டு அவருக்கு வேறு வழியில்லை. *அறிவிப்பவர் : ஜாபிர்(ரழி), நூல் : மிஸ்காத்*

(உலூல் அஸ்ம், அல்லாஹ்வுடன் பேசியவர், ஒரு ஷரீஅத்துக்குரியவர், மூஸா(அலை) அவர்களையே, இப்போது யாரும் பின்பற்ற முடியாதென்றால், அவர்களே இப்போதிருந்தால் அவர்களுக்கே நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றுவது தவிர்த்து வேறு வழி இல்லையென்றால் இமாம்களைத் தாங்கள் வழிகாட்டிகளாக ஏற்று நடப்பது சரிதானா? நிதானமாக சிந்திக்கவும்.)

8. அல்லாஹ்வின் நெறிநூலில் இல்லாத நிபந்தனைகளை இடும் மாந்தருக்கு என்ன கேடு நேர்ந்ததோ? அல்லாஹ்வின் நெறிநூலில் இல்லாத நிபந்தனைகள் அனைத்தும் தள்ள வேண்டியவை, அவைநூறு ஷரத்துக்களாயினும் சரியே.

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி), நூல் : புகாரீ*

9. எவர் எம்மால் ஏவப்படாத அமல்களைச் செய்கின்றாரோ, அவை அல்லாஹ்விடத்தில் மறுக்கப்பட் டவையாகும். *அறிவிப்பவர்: ஆயிஷனா(ரழி), நூல்கள்: புகாரி, முஸ்லிம்*

~~10. அல்லாஹ்(ஜல்) என்னைக் கற்றுக் கொடுப்ப~~ வனாகவும், எளிதாக்குபவனாகவும் அனுப்பி இருக்கிறான்.

அறிவிப்பவர் : ஜாபிர்(ரழி), நூல் : முஸ்லிம்

நபி(ஸல்) அவர்கள் போதித்ததை இமாம்கள் தான் எளிதாக்கி இருக்கின்றனர் என்று நம்பிக்கை கொள்ளலாமா?

**11. வெள்ளை வெளேர் என்ற நிலையில் உங்களை நான் விட்டுச் செல்லுகிறேன். அதன் இரவு பகலைப் போன்றது. அதில் அழிந்து நாசமாகக் கூடியவனைத் தவிர வேறு யாரும் வழி தவறவே மாட்டார்கள்.**

*அறிவிப்பவர் : உமர்(ரழி), நூல் : ரஜீன்*

(இதற்கு மேலும் தெளிவாக்க இமாம்கள் தேவையா?)

**12. மக்கா மாநகரம் வெற்றிக் கொள்ளப்பட்ட ஆண்டு ரமழான் மாதத்தில் நபி(ஸல்) அவர்கள் அங்குப் புறப்பட்டனர். குராவுல் கமீம் என்ற இடத்திற்குச் செல்லும் வரை அவர்கள் நோன்போடு சென்றார்கள். மக்களும் நோன்போடு இருந்தனர். பின்னர் நபி(ஸல்) அவர்கள் ஒரு கோப்பையில் நீர் கொணரச் செய்து மக்கள் அனைவரும் பார்க்கும் அளவுக்கு கோப்பையை உயர்த்தி மக்களும் அதனைப் பார்த்த பின்னர் அதனைப் பருகினார். இதன் பின் மக்களில் சிலர் நோன்போடு இருப்பதாக நபி(ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு அவர்கள் "அத்தகையோர் பாவிகளே! அத்தகையோர் பாவிகளே! என்று கூறினர்."**

*அறிவிப்பவர் : ஜாபிர்(ரழி), நூல்கள் : முஸ்லிம், திர்மிதீ*

(நபி(ஸல்) அவர்கள் பிடித்து விட்ட ரமழான் நோன்பைப் பூர்த்தி செய்ய நினைத்தவர்களை நபி(ஸல்) அவர்கள் பாவிகள் பாவிகள் என்று சொல்லி இருந்தால், நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் இல்லாதவற்றை நல் அமல்களாக நினைத்துச் செய்வோரின் நிலை என்ன? சற்றுச் சிந்திக்கவும்.

**13. எவர் அல்குர்ஆனுக்குத் தம் நோக்கப்படி விளக்கம் கூறுகின்றாரோ அவர் சரியாகக் கூறியிருந்த போதிலும், நிச்சயமாக அவர் குற்றவாளியே ஆவார் தவறிழைத்தால் நிராகரிப்பவர் ஆகின்றார்.**

*அறிவிப்பவர் : ஜுன்துப்(ரழி), நூல்கள் : அபூதாவூத், திர்மிதீ*

(நபி(ஸல்) அவர்கள் விளக்கத்தை விட்டு வேறு விளக்கம் தேடுபவர்கள் சற்றுச் சிந்திக்க.)

**14.** எவர் மார்க்கத்தில் புதுமையை ஏற்படுத்து கிறாரோ அவ்விதம் ஏற்படுத்துபவருக்கு இடமளிக்கி றாரோ அவர்கள்மீது அல்லாஹ்வினதும், மலக்குகளி னதும், மனிதர்களினதும் சாபம் உண்டாகின்றது.

*அறிவிப்பவர் : அலீ(ரழி), நூல்கள் : அபூதாவூது, நஸயீ*

**15.** ஒருவர் தவறை தவறென்று அறிந்த பின்னும் வாதம் புரிவாராயின் அவர் அதைவிட்டுத் தவிர்த்துக் கொள்ளாதவரை அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகியே இருப்பார். எவராவது ஒரு முஸ்லிமிடம் இல்லாததைக் கூறுவாராயின் அவர் அக்கூற்றிலிருந்து வெளிப்படாத வரை, நரகவாசிகளில் எண்ணப்படுவார். எவராவது அநீதமான வாதங்களில் உதவி செய்வாராயின் அவர் நிச்சயமாக அல்லாஹ்வின் கோபத்திற்காளானவராவார்.

*அறிவிப்பவர் : இப்னு உமர்(ரழி), நூல் : அபூதாவூது*

**16.** தக்லீத் சம்பந்தப்பட்ட வார்த்தை வரக்கூடிய ஹதீது உண்டா? ஆம்! இருக்கிறது. குர்ஆனில் (5:2,97) உள்ளதுபோல் குர்பானி மிருகங்கள் குறித்து ஹதீஸிலும் வருகிறது.

"ஒருவர் ஒரு ஒட்டகத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார் அது முகல்லிதாக இருந்தது (அதன் கழுத்தில் பட்டி கட்டப்பட்டிருந்தது) நபி(ஸல்) அவரை அதில் சவாரி செய்யும்படிச் சொன்னார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல் : முஸ்லிம்*

**17.** முஸ்லிமான ஒவ்வொருவர் மீதும் மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்வது கடமையாகும். தகுதி யற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது பன்றியின் கழுத்தில் தங்கமுத்து மாலையைப் போடுவது (தக்லீத்) போன்றதாகும் என நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ் இப்னு மாலிக்(ரழி), நூல் : இப்னு மாஜா*

நபி(ஸல்) மறைவுக்குப் பிறகு மார்க்கத்தில் புதிதாக ஒன்றையும் இணைக்க முடியாது என்பதற்கு நபி(ஸல்)

அவர்கள் மூலமாகப் பல ஆதாரங்களைக் கொடுத்துவிட் டோம். சிலர் பித்அத்தின் பொருள் விளங்காமல் தடுமாறு கிறார்கள். நபி(ஸ்) அவர்கள் '**பித்அத்**' என்று குறிப்பிடு வது அனைத்தும் மார்க்க அனுஷ்டானங்களில் புதிதாகச் சேர்க்கப்படுபவையே ஆகும். 5:3 இன்றைய தினம் மார்க்கத்தைப் பூர்த்தியாக்கி நிஹ்மத்தை நிறைவு செய்து பொருந்திக் கொண்டேன் என்று அல்லாஹ் குறிப்பிடுவது மூலம் நபி(ஸல்) அவர்கள் மார்க்கத்தை நிறைவு செய்ய அனுப்பப்பட்டார்களே யல்லாமல் (துன்யாவை) இவ்வுலகை நிறைவு செய்ய அல்ல. துன்யாவையும் நிறைவு செய்திருந் தால் இன்றைய நவீனக் கண்டு பிடிப்புகள் எதுவும் வெளி வந்திருக்க முடியாது. இது எங்கள் யூகம் அல்ல. நபி(ஸல்) அவர்களே விளக்கம் தருகிறார்கள்.

நபி(ஸல்) அவர்கள் மதீனா வந்த தொடக்கத்தில், அங்கு நடந்து வந்த ஒரு விவசாய முறையைத் தடுத்து விட்டார்கள். அதனால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இது நபி(ஸல்) அவர்களுக்குத் தெரிந்ததும், நானும் உங்களைப் போன்ற மனிதன்தான். உங்களின் மார்க்கம் பற்றி நான் கட்டளையிடுவேனாயின், அதை ஏற்று நடங் கள். அன்றி நான் எனது ஆலோசனையைக் கொண்டு ஒன்றைக் கூறினால், உங்கள் நோக்கப்படி செய்து கொள்ளுங்கள் என்று அறிவித்தனர்.

இதேபோல் விடுதலைப் பெற்ற பரீரா(ரழி) தனது அடிமைக் கணவர் முகீஸை(ரழி) வேண்டாம் என்று அறி வித்தபோது, முகீஸின்(ரழி) மனவேதனையைக் கேட்டு நபி(ஸல்) வருந்திப் பரீராவை(ரழி) முகீஸோடு(ரழி) வாழும் படி சொன்னதற்கு, இது மார்க்கக் கட்டளையா? என்று பரீரா(ரழி) கேட்டனர். என் சிபாரிசு என்ற நபி(ஸல்) அவர்கள் கூறினர். நபி(ஸல்) அவர்களின் சிபாரிசை பரீரா(ரழி) ஏற்றுக்கொள்ளவில்லை. நபி(ஸல்) அவர்களும் அதற்காக அவர்களைக் கண்டிக்கவில்லை.

இவற்றிலிருந்து நபி(ஸல்) அவர்கள் 'பித்அத்' என்று குறிப்பிட்டது மார்க்க நடைமுறைகளில் மட்டும்தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகின்றது. இன்றுள்ள நவீனக் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு உலக வாழ்வை வளப்படுத்திக் கொள்வது '**பித்அத்**' ஆகாது. இவற்றை பித்அத் என்று எண்ணுவது ஷைத்தானின் ஒரு பெரிய ஏமாற்று வேலையாகும். இவ்வாறு எண்ணச் செய்து

அதன் மூலமாக நல்ல பித்அத் (பித்அத் ஹஸனா), கெட்ட பித்அத் என்று மனிதர்களே கற்பனை செய்து கொண்டு, மார்க்க நடைமுறைகளிலும் பித்அத்துக்களை நுழைக்க ஷைத்தான் வழி வகுத்தான். அப்படி ஏற்பட்டவையே இந்தத் தக்லீது (கண்மூடிப் பின்பற்றல்) தஸவ்வுஃப் (தரீக்காக்கள்) ஆகிய இரண்டுமாகும்.

அடுத்து இந்தத் தக்லீத் குறித்து ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅதாபியீன்கள் என்ன கூறிச் சென்றுள்ளார்கள் என்று பார்ப்போம்.

## ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅதாபியீன்கள் கூற்றுக்கள்

### 1. தாரமி பக்கம் 27

அபூ அப்துர்ரஹ்மான் கூறுகிறார்கள் : அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது(ரழி) கூறுகிறார்கள் : குர்ஆன், ஹதீஸ்களை மட்டும் பின்பற்றி நடப்பீர்களாக புதிய விஷயங்களை உண்டாக்காதீர்கள். உங்களுக்குக் குர்ஆன், ஹதீஸ்களே போதுமானவை யாகும்.

### 2. மீஸான் ஷஹ்ரானி பாகம் 1, பக்கம் 47

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது(ரழி) அவர்கள் "நீங்கள் உங்களுடைய மார்க்கத்தில் யாரையும் 'தக்லீத்' செய்யாதீர்கள் என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.

### 3. ஹம்மானி பக்கம் 26 :

மக்கள் மஸ்ஜிதில் "லாயிலாஹ இல்லல்லாஹ்"வைக் கூட்டாகச் சொல்லிக் கொண்டிருப்பதாகவும் இன்னும் "தரூத்" கூட்டாகச் சொல்லிக் கொண்டிருப்பதாகவும் அறிந்ததும் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது(ரழி) உடனடியாக அங்குச் சென்று ஜனங்களே! நபி(ஸல்) அவர்கள் காலத்தில் யாரையும் இவ்வாறு கலிமா, தரூது படிக்க நான் பார்த்ததில்லை. உங்களை நான் பித்அத்துக்காரர்கள் என்று அறிகிறேன். இவ்வாறு சொல்லி அந்த மக்களை மஸ்ஜிதைவிட்டு வெளியாக்கி விட்டார்கள். (தாரமீயிலும் இதற்கு நெருக்கமான வாசகங்கள் காணப்படுகின்றன).

4. ஷாஹ் வலியுல்லாஹ்(ரஹ்)வின் ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிகா பக்கம் 155 அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி)

அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் வேதனை உங்கள் மீது உண்டாகும் என்ற அச்சம் உங்களுக்கு இல்லையா? நான், நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று சொல்லுகிறேன். நீங்களோ அந்த மனிதர் சொன்னார் இந்த மனிதர் சொன்னார் என்று சொல்கிறீர்கள்.

5. இமாம் ஷவ்கானி(ரஹ்)யின் அல்கவ்லுல் மூபித் பக்கம் 31 : நபித்தோழர்கள், தாபியீன்கள், தபஅதாபியீன்கள் யாரும் யாரையும் தக்லீத் செய்யவுமில்லை எந்த அறிஞரின் பேராலும் மதஹபுகளை உண்டாக்கவுமில்லை.

6. ஷாஹ் வலியுல்லாஹ்(ரஹ்)வின் இக்துல் ஜய்யீது பக்கம் :41 சந்தேகமில்லாமல் அனைத்து நபித்தோழர்களும் ஆரம்ப முதல் இறுதிவரை அனைத்துத் தாபியீன்களும் ஆரம்ப முதல் இறுதி வரை, அனைத்துத் தபஅதாபி யீன்களும் தொடக்கம் முதல் இறுதி வரை இது விஷயத் தில் தடுக்கக் கூடியவர்களாகவும், மறுக்கக் கூடியவர் களாகவும் இருந்தார்கள் என்பது உறுதியாகிவிட்டது. அதாவது தங்களுக்குள் ஒரு வரையோ முன் சென்ற எந்த மனிதரையோ பின்பற்றுவதையோ அவர்கள் பேச்சுக்களை ஆதாரமாகக் காட்டுவதையோ அவர்கள் பேச்சுக் கள் அனைத்தையும் எடுத்துக் கொள்வதையோ தடுப் பவர்களாகவே இருந்தனர்.

**7. இஃலாமுல் முவக்கியீன் பாகம்:1, பக்:17**

அப்துல்லாஹ் இப்னு முஹ்தமர் **"முகல்லிது இன்ஸானுக்கும், ஹஸவானுக்கும் வித்தியாசம் இல்லை"** என்று சொல்பவர்களாக இருந்தார்கள்.

(மனிதனுடைய சிறப்பே அவனது பிரித்தறியும் பகுத்தறிவைக் கொண்டுதான் இருக்கிறது. அந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்தாமல் யாரையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றினால் (தக்லீத்), பகுத்தறிவில்லாத மிருகங்களுக்கும் அவனுக்கும் வேறுபாடு இல்லை என்று சொல்வதில் தவறு இல்லை தானே!)

8. மீஸான் ஷஃறானி பாகம் : 1, பக்கம் : 47

இமாம் ஜஃபர் சாதிக்(ரஹ்) கூறினார்கள் :

உம்மத்தில் இதைவிடப் பெரிய ஃபித்னா எது இருக்க முடியும்? நாங்களே அனுமானம் செய்து மனிதர் கள் அபிப்பிராயப்படி அல்லாஹ் ஹராமாக்கியதை ஹலால் என்றும் அல்லாஹ் ஹலால் ஆக்கியதை ஹராம் என்றும் எடுத்து நடப்பதைவிடப் பெரிய ஃபித்னா இல்லவே இல்லை. (இவர்கள் பெயரால் விறகு வெட்டியான கிஸ்ஸா என்று ஒரு கட்டுக்கதை கட்டிவிடப்பட்டுள்ளது.)

இவற்றிலிருந்து ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅதாபியீன்கள் தக்லீத் செய்யக்கூடியவர்களாகவோ, மத்ஹபுவாதிகளாகவோ இருந்ததில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

1. இமாம் அபூஹனீஃபா(ரஹ்) கூறுகிறார்கள்:

إذا صح الحديث فهو مذهبي

ஹதீஸ் சஹீஹாக (ஆதாரப் பூர்வமாக) கிடைக்கும் போது அதை பின்பற்றுவதே என் கொள்கையாகும்.

*ஆதாரம் : ஹாஷியா இப்னு ஆபிதீன். பாகம் 1, பக்கம் 63,*
*ரஸ்முல் முப்தீ பாகம் 1, பக்கம் 4, ஈகாழுல் ஹிமம் பக்கம் 62.*

لا يحـــل لأحـــد أن يـــأ خذ بقولنا مـــالم يعلم من إين أخذناه

**"எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நாம் முடிவு செய்தோம்"** என்பதை அறியாமல் எங்கள் சொல்லை எடுத்து நடப்பது எவருக்கும் ஹலால் இல்லை.

*ஆதாம் : அல்இன்திகா பக்கம் 145, ஹாஷியா இப்னு ஆபீதின்*
*பாகம் 6, பக்கம் 293, ரஸ்முல் முஃப்தீ, பக்கம் 29,32*

وفي رواية حرام على من لم يعرف دليلي أن يفتي بكلامي

என்னுடைய ஆதாரத்தை அறியாதவன் என் சொல்லைக் கொண்டு ஃபத்வா கொடுப்பது ஹராமாகும்.
ஆதாரம் : மீஸான் ஷஃரானி, பாகம் 1, பக்கம் 55

زاد في رواية فإننا بشرفقول القول اليوم ونرجع عنه غداً

நாங்கள் இன்று ஒரு சொல்லைச் சொல்லிவிட்டு, நாளை அதிலிருந்து பின்வாங்கி அதனை திரும்ப பெற்றுக் கொள்கின்ற மனிதர்களே.
ஆதாரம் : மீஸான் ஷஃரானி, பாகம் 1, பக்கம் 55

وفي أخرى ويحك يا يعقوب ﴿هو أبو يوسف﴾ لا تكتب كل ما تسمع مني فإني قد أرى الرأي اليوم وأتركه غداً وأرى الرأي غداً وأتركه بعد غد

அபூ யூசுஃபே! என்னிடமிருந்து கேட்டவற்றை எல்லாம் எழுதி வைத்து விடாதே; ஏனெனில் இன்று ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டு (ஒரு தீர்ப்பு அளிப்பேன்) நாளை அதை விட்டு விடுவேன். நாளை ஒரு அபிப்பி ராயம் கொண்டு (தீர்ப்பு அளிப்பேன்) நாளை மறுநாள் அதை (தீர்ப்பு அளித்ததை) விட்டுவிடுவேன். ஆதாரம் இமாம் இப்னு முயீனுடைய 'தாரிக்', பாகம் 6, பக்கம் 71

إذا قلت قولاً يخالف كتاب الله تعالى وخبر الرسول ﷺ فاتركوا قولي

அல்லாஹ்வுடைய நெறிநூலுக்கும் நபி(ஸல்) அவர் களின் சொல்லுக்கும் மாற்றமான ஒன்றை நான் சொன் னால், என் சொல்லை விட்டுவிடுங்கள்!
ஆதாரம் : ஈகாமுல் ஹிமம், பக்கம் 50

2. இமாம் மாலிக்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

إنما أنا بشر أخطىء وأصيب فانظروا في رأيي فكل ما وافق الكتاب والسنة فخذوه وكل ما لم يوافق الكتاب والسنة فاتركوه

1. நான் (சில நேரங்களில்) சரியாகவும், (சில நேரங்களில்) தவறாகவும் முடிவெடுக்கக் கூடிய ஒரு மனிதனே. என் முடிவுகளை நீங்களும் ஆராயுங்கள்!

குர்ஆனுக்கும், நபி வழிக்கும் பொருத்தமானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்! குர்ஆனுக்கும், நபிவழிக்கும் பொருத்தமில்லாதவற்றை விட்டு விடுங்கள்!

*ஆதாரம் : ஜாமிவு இப்னு அப்துல்பர், பாகம் 2, பக்கம் 42,*
*உஸுலுல் அஹ்காம், பாகம் 6, பக்கம் 149, ஈகாழுல் ஹிமம், பக்கம் 62*

ليس أحدً بعد النيﷺ إلا ويؤخذ من قوله ويترك إلا النبي

2. நபி(ஸல்) அவர்களின் சொல்லைத் தவிர வேறு எவரது சொற்களிலும், எடுக்கத் தக்கவைகளும் உண்டு. விடப்படக் கூடியவைகளும் உண்டு. நபி(ஸல்) அவர்கள் சொல் மட்டுமே முற்றாக ஏற்கப்பட வேண்டியவை.

*ஆதாரம் : இர்ஷாதுஸ்ஸாலிக் பாகம் 1, பக்கம் 227,*
*ஜாமிவு இப்னு அப்துல் பர், பாகம் 2, பக்கம் 91,*
*உஸுலுல் அஹ்காம், பாகம் 6, பக்கம் 145*

(இதே வார்த்தையை இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் கூறியதாக, இமாம் தகியுத்தின் சுபுக்கீ அவர்கள் தனது 'பதாவா'வில் பாகம் 1, பக்கம் 148ல் குறிப்பிடுகிறார்கள்).

قال ابن وهب سمعت مالكاً سئل عن تخليل أصابع الرجلين في الوضوء؟ فقال ليس ذلك على الناس قال فتركته حتي خف الناس فقلت له عندنا في ذلك سنة فقال وما هي؟ قلت حدثنا الليث بن سعد وابن لهيعة وعمرو بن الحارث عن يزيد بن عمرو المعافري عن ابي عبدالر حمن الحبلي عن المستورد بن شداد القرشي قال رأيت رسول اللهﷺ يدلك يخصره ما بين أصابع رجليه فقال إن هذا الحديث حسن وما سمعت به قط إل الساعة ثم سمعته بعد ذلك يسأل فيأمر بتخليل الأ صابع

3. **"ஒளூ செய்யும் போது கால் விரல்களைக் கோதிக் கழுவ வேண்டியதில்லை"** என்ற கருத்தை இமாம் மாலிக் அவர்கள் கொண்டிருந்தார்கள், அப்போது நான் **"கால்களைக் கோதிக் கழுவ வேண்டும்"** என்று ஹதீஸ் உள்ளதாகக் கூறி அவர்களிடம் ஸனதுடன் அறிவித்தேன். அதற்கு இமாம் மாலிக் அவர்கள், **"இது சரியான ஹதீஸ்தான். நான் இதுவரை கேள்விப் பட்டதில்லை"** என்று கூறிவிட்டு, அதன்பின் கால் விரல்களையும் கோதிக்கழுவிட ஆணையிட்டார்கள் என்று இப்னு வஹ்ப்(ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

***ஆதாரம் : அல்ஜர்ஹு, வத்தஃதீல் முன்னுரை, பக்கம் 31,32***

**3. இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.**

ما من أحد إلا وتذهب عليه سنة لرسول الله ﷺ وتعزب عنه فمهما قلت من قول أو أصّلت من أصل فيه عن رسول الله ﷺ خلاف ما قلت فالقول ما قال رسول الله ﷺ وهوقولي

1. எவராக இருந்தாலும் அவரை விட்டும் ரசூல்(ஸல்) அவர்களின் வழிமுறைகளில் ஏதேனும் (சில) தவறி விடத்தான் செய்யும். நான் ஏதேனும் ஒரு சொல்லைச் சொல்லும் போது, அல்லது ஏதேனும் ஒரு அடிப்படையை வகுத்துத் தரும்போது, அல்லாஹ்வின் திருத்தூதருடைய கூற்றுக்கு மாற்றமாக அது இருந்தால், ரசூல்(ஸல்) அவர்களின் கூற்றே ஏற்கப்பட வேண்டும்! ரசூல்(ஸல்) அவர்கள் கூற்றை ஏற்பதே என் கொள்கையு மாகும். **ஆதாரம்:தாரீகு திமிஷ்க் இப்னு அஸாகிர் பாகம் 3, பக்கம் 15, ஈகாழுல் ஹிமம் பக்கம் 100**

أجمع المسلمون على أن من استبان له سنة عن رسول الله ﷺ لم يحل له أن يدعها لقول أحد

2. ரசூல்(ஸல்) அவர்களின் வழிமுறை எவருக்குத்

தெரிகின்றதோ, அதை எவருடைய கருத்துக்காகவும் விடுவது ஹலால் இல்லை என்று முஸ்லிம்கள் அனைவரும் **'இஜ்மாவு'** செய்துள்ளனர்.

**ஆதாரம் : ஈகாழுல் ஹிமம் பக்கம் 68**

**إذا وجدتم في كتابي خلاق سنة رسول الله ﷺ فقولوا بسنة رسول الله ﷺ ودعوا ما قلت ﴿وفي رواية﴾ فاتبعو ها ولا تلتفتوا إلى قول أحد**

3. எனது நூலில் நபி(ஸல்) அவர்களின் சுன்னத்துக்கு மாற்றமானதைக் கண்டால் ரசூலுடைய சுன்னத்தையே (மக்களிடம்) சொல்லுங்கள்! என் கூற்றை விட்டுவிடுங்கள்!

*ஆதாரம் : அல்மஜ்மூவு (நவவீ) பாகம் 1, பக்கம் 63, இப்னு அஸாகிர், (9,10,15), ஈகாழுல் ஹிமம் பக்கம் 706,*

*தம்முல் கலாம் 1,3,47, அல்இஹ்திஜாஜ் பாகம் 2*

**إذا صح الحديث فهو مدهي**

4. ஆதாரப் பூர்வமான ஹதீஸ் இருக்கும்போது அதைப்பின் பற்றுவதே எனது கொள்கை.

*ஆதாரம் : அல்மஹ்மூவு (நவவீ) பாகம் 1, பாகம் 63, மீஸான் ஷஃரானி பாகம் 1, பக்கம் 57, ஈகாழுல் ஹிமம் பக்கம் 107*

(இதை நான்கு இமாம்களும் கூறியதாக இமாம் இப்னு ஹஸ்மு அவர்களின் கூற்றை இமாம் ஷஃரானி பாகம் 1, பக்கம் 57-ல் குறிப்பிடுகிறார்கள்).

أنتم أعلم بالحديث والرجال مني فإذا كان الحديث الصحيح فأعلموني به أي شيء يكون كوفياً أو بصريًا أو شامياً

5. இமாம் அஹ்மது இப்னு ஹன்பலை நோக்கி இமாம் ஷாஃபிஈ(ரஹ்) கூறுகிறார்கள்.

**"ஹதீஸ்களையும், அதன் அறிவிப்பாளர்களையும் நீங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளீர்கள்! ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்றால் உடனே அதை எனக்கு அறிவித்து விடுங்கள்!"**

*ஆதாரம் : ஆதாபுஷ் ஷாஃபியி, பக்கம் 94,95, அபூநயீமின் ‘ஹில்யா’ பாகம் 9, பக்கம் 106, இப்னுல் ஜவ்ஸியின் “மனாகிபுல் இமாம் அஹமத்” பக்கம் 499, ‘அல் இன்திகா’ பக்கம் 75*

كل مسألة صح فيها الخبر عن رسول الله ﷺ عند أهل النقل غلاف ما قلت فأنا راجع عنها في حياتي وبعد موتي

நபி(ஸல்) அவர்களின் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் மூலம் வந்துள்ள சட்டங்களுக்கு மாற்றமாக நான் சொன்ன அத்தனைச் சட்டங்களிலிருந்தும் நான் வாழும் போதும் விலகிக் கொண்டேன். எனது மரணத்திற்குப் பின்னும் நான் விலகிவிட்டேன். (நான் இதற்குப் பொறுப்பேற்க இயலாது)

*ஆதாரம் : ஹில்யா (அபூநயீம்) பாகம் 9, பக்கம் 107, இஃலாமுல்மூகியின், பாகம் 2, பக்கம் 363, ஈகாழூல் ஹிமம் பக்கம் 104.*

إذا رأيتموني أقول قولاً وقد صحَّ عن النبي ﷺ خلافه فاعلموا أن عقلي قد ذهب

நான் எதையாவது சொல்லி அது நபி(ஸல்) அவர்கள் கூற்றுக்கு மாற்றமாக இருப்பின், என் அறிவுக்குறைவைப் புரிந்து கொள்ளுங்கள். *ஆதாரம் : இப்னு அஸாகிர் 1,10,15, அல் ஆதாப் (இப்னு அபீஹாதம்) பக்கம் 93, அபூநயீம், பாகம் 9, பக்கம் 106*

كل ما قلت؟ فكان عن النَّبي ﷺ خلاف قولي مما يصح فحديث النبي أولى فلا تقلدوني

நான் சொன்ன சொற்கள் ஆதாரபூர்வமான நபி மொழிக்கு முரண்படும் போது, நபியின் ஹதீஸ்தான் ஏற்கத்தக்கது. என்னைப் பின்பற்றாதீர்கள்.

*ஆதாரம் : அல்ஆகாப் (இப்னு அபிஹாதம்) பக்கம் 93, அபூநயீம் பாகம் 9, பக்கம் 106.*

كل حيدث عن النَّبي ﷺ فهو قولي وإن لم تسمعوه مني

நபி(ஸல்) அவர்கள் வாயிலாக வந்துள்ள எல்லா ஹதீஸ்களும் தான், என் சொல்லாகும். என் மூலம் நீங்கள் அதைச் செவியுறா விட்டாலும் (அதையே நான் சொன்னதாகக் கருதிக் கொள்ளுங்கள்.)

*அல் ஆதாப் (இப்னு அபீஹாதம்) பக்கம் 93,94*

4. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்

لا تقلدني ولا تقلد مالكاً ولا الشافعي ولا الأوزاعي ولا الثوري وخذ من حيث أخذوا

என்னையோ, மாலிக், ஷாஃபியீ, அவ்ஸாயீ, ஸவ்ரீ போன்ற (இமாம்களையோ) பின்பற்றாதே. அவர்கள் எதிலிருந்து புரிந்து கொண்டார்களோ (அந்திக் குர்ஆன், ஹதீஸிலிருந்து நீயும் புரிந்துகொள்).

*ஆதாரம் : ஈகாழுல் ஹிமம், பக்கம் 113*

رأي الأوزاعي ورأي مالك ورأي أبي حنيفة كله رأي وهو عندي سواء وإنما الحجة في الآثار

இமாம் அபூ ஹனீஃபா, இமாம் மாலிக், இமாம் அவ்ஸாயீ ஆகியோரின் கருத்துக்கள் அவர்களின் அபிப்பிராயமே. உண்மையான ஆதாரம் நபித்தோழர்களின் வழியில்தான் உண்டு.

*ஜாமிவு இப்னு அப்துல்பர், பாகம் 2, பக்கம் 149*

من رد حديث رسول الله ﷺ فهوعلى شفا هلكة

நபி(ஸல்) அவர்களின் ஹதீஸை நிராகரிப்பவன் அழிவின் விளிம்பிலேயே இருக்கிறான்.

*ஆதாரம் : இப்னுல்ஜவ்ஸி, பக்கம் 182*

**இப்போது சிந்தியுங்கள்**

தக்லீத் (கண்மூடிப் பின்பற்றல்) விஷயமாக குர்ஆன், ஹதீஸ்கள், ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅு தாபியீன்கள், இமாம்கள் அனைவரது கூற்றுக்களையும், அபிப்பிராயங்களையும் உங்களுக்கு முன்னர் எடுத்து

வைத்து விட்டோம். எங்கள் கருத்துக்கு இதில் இடமில்லை. எங்கள் மீது கோபப்படுவதிலும் நியாயம் இல்லை. காரணம், குர்ஆனிலும், ஹதீஸ் நூல்களிலும் மற்றும் பெரியார்களின் நூல்களிலுமுள்ள குர்ஆன், ஹதீஸ் களுக்கு ஒத்த கூற்றுக்களையும் ஆதாரங்களாக எடுத்துக் கோவை செய்து தந்துள்ளோம். இவற்றிலிருந்து ஒன்று தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது குர்ஆனோ, ஹதீஸ்களோ, ஸஹாபாக்களோ தாபியீன்களோ, தபஅு தாபியீன்களோ தக்லீதை (கண்மூடிப் பின் பற்றல்) ஆதரிக்கவில்லை. மாறாக மறுத்திருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களின் தலைமுறையில் சிறந்தது என் தலை முறை. அடுத்தது அடுத்த தலைமுறை, அடுத்தது அடுத்த தலைமுறை என்ற உண்மை ஹதீஸின்படி, அல்லாஹ்(ஜல்) அந்தத் தலைமுறையினரைத் 'தக்லீத்' தடுமாற்றத்தை விட்டும் பாதுகாத்துக் கொண்டான். சுமார் ஹிஜ்ரி 400 வாக்கில் ஒரு சிலர், ஒரு சில காரணங்களுக்காக இந்தத் தக்லீத் தத்துவத்தை இஸ்லாத்தில் புகுத்தியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும், அந்தக் காரணங்கள் பற்றியும் இப்போது நாம் ஆராயத் தேவையில்லை. வேண்டும் என்றால் அந்த விவரங்களைப் பின்னால் தெளிவாகத் தருகிறோம்.

தக்லீதை (கண்மூடிப் பின்பற்றல்) நாங்கள் வன்மை யாகக் கண்டிக்க அடிப்படைக் காரணங்கள் இரண்டாகும். ஒன்றுக தக்லீத் குர்ஆனுக்கும், ஹதீஸ்களுக்கும் முரணாக இருக்கின்றது. இரண்டுக இன்று முஸ்லிம் சமுதாயத்தில் காணப்படும் அனைத்து நாசங்களுக்கும், பிளவுகளுக்கும், பிரிவுகளுக்கும் இந்தத் தக்லீதே ஆணிவேராக இருக் கின்றது. முஸ்லிம் சமுதாயத்தைக் கபுரு வணக்கத் திலும், சடங்குகளிலும் மூழ்கச் செய்துள்ள தஸவ்வுபின் பிறப்பிடமும் இந்தத் தக்லீதே ஆகும்.

இன்று சர்வதேச நிலைகளும், குறிப்பாக இந்தியா வின் நிலைகளும் நீங்கள் அறியாததன்று. முஸ்லிம் நாடுகளே ஒன்றோடொன்று பல ஆண்டுகளாகச் சண்டை யிட்டுக் கொண்டிருக்கின்றனக பல பிரிவுகளாகப் பிரிந்து தங்களுக்குள் மோதிக்கொள்கின்றன. இஸ்லாத்தை ஒழித் துக்கட்ட சில தீய சக்திகள் அயராது முயன்று

வருகின்றன. கல்கத்தா ஹைகோர்ட்டில் குர்ஆனைத் தடைசெய்ய ரிட்மனு கேரளா ஹைக்கோர்ட்டில் முஸ்லிம் தாடி வைத்துக் கொள்ளத்தடை ஹைக்கோர்ட்டுகளிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் ஷரீஅத்திற்கு மாற்றமான சாகும் வரை பெண்ணுக்கு ஜீவனாம்சம் அளிக்கும் தீர்ப்பு, ‘இந்தியாவில் யூனிபோர்ம் சிவில் கோர்ட்’ என்ற பேரால் குர்ஆன், ஹதீஸ்கள் கொண்டு நிலை நாட்டப்பட்டுள்ள ஷரீஅத்தை ஒழிக்கும் திட்டம் இப்படிப் பலப்பல முயற்சிகள் இஸ்லாத்தை யும், முஸ்லிம்களையும் ஒழித்துக்கட்ட தீய சக்திகள் தீவிரமாக முயன்று வருகின்றன. இவற்றை விட்டுத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, முஸ்லிம் களுக்கு வேறு நாதி இல்லை பாதுகாப்பளிக்கக் கடமைப் பட்டுள்ள அரசாங்கம் பாதுகாப்பளிக்கும் நிலையில் இல்லை. இந்தச் சூழ்நிலைகளில் முஸ்லிம்களாகிய நாம் பல பிரிவுகளாகப் பிளவுபட்டு, நமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் நம் நிலை என்ன? நிச்சயமாக இந்த நிலை நீடிக்கக் கூடாது. நமக்குள் இருக்கும் வேற்றுமை கள் ஒழிக்கப்பட வேண்டும். ஒற்றுமையாக அல்லாஹ்வின் கயிற்றைப் (அல்குர்ஆன்) பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

**“நீங்கள் எல்லோரும், அல்லாஹ்வுடைய (நெறி நூலாகிய) கயிற்றை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்துவிட வேண்டாம்”.**

*அல்குர்ஆன் 3:103*

**“நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக் கும் கீழ்ப்படியுங்கள். உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளா தீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்து விடுவீர்கள், உங்கள் வலிமை குன்றிவிடும்”.**

*அல்குர்ஆன் 8:46*

இந்த ஒற்றுமை எப்படி ஏற்படும்? நாமெல்லாம் முஸ்லிம்கள் நபி(ஸல்) அவர்களை மட்டுமே பின்பற்று கிறோம் என்பதால் ஏற்படுமா? அல்லது நாமெல்லாம் ஹனஃபி, ஷாஃபி, மாலிகி, ஹன்பலி என்று மத்ஹபு களின் பெயராலும், காதிரியா, ஷாதுலியா, ரிபாயியா, நக்ஷபந்தியா என்று தரீக்காக்களின் பெயராலும் ஜாக்,

ததஜ, இதஜ போன்ற இயக்கங்களின் பெயராலும் பிளவுபட்டுத் தர்க்கித்துக் கொள்ளுவதால் ஏற்படுமா? சற்று நிதானமாகச் சிந்தியுங்கள். முஸ்லிம் என்று மட்டும் சொல்லி நமக்குள் ஒற்றுமையை உண்டாக்கிக் கொண்டால், இவ்வுலகிலும் சீரான, அமைதியான வாழ்வு கிடைக் கும். மறுமையிலும் பெரும் பேறுகள் கிடைக்கும். மாறாகப் பிரிந்துகிடந்தால் மறுமையை இழந்துவிடுவதோடல்லாமல்,

இந்த உலகத்திலும் நாம் பெரும் துன்பங்களையும், அமைதியின்மையையும் எதிர் நோக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். எது தேவை? முஸ்லிம்களுக்கு நடுவில் ஒற்றுமை மிக மிக இன்றியமையாததாகத் தேவைப் படுகிறது. இந்தக் கால கட்டத்தில், ஆலிம்களேக் உங்களிடம் அன்போடு வேண்டுகோள் விடுக்கிறோம். 'தக்லீத்' அதன் வழி முஸ்லிம்களில் பிளவுகள் கூடாது என்பதற்கு எங்களை விட நீங்கள் மிகுந்த ஆதாரங்களை அறிவீர்கள். இம்மையைவிட மறுமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம். இந்த சமுதாயத்தின் மீது இரக்கம் காட்டுங்கள். அழிவின் விளிம்பில் இருக்கக்கூடிய முஸ்லிம் சமுதாயத்தைத் தட்டி எழுப்புங்கள். உண்மையை மறைக்காமல் எடுத்துச்சொல்லுங்கள். உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்கவும், உங்களுக்குத் தோள் கொடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். உண்மை மறைக்கப்படும் போது அதை யார் மறைத்தாலும், அதை எதிர்த்துக்குரல் கொடுக்கவும், வேண்டுமென்றால் போராடவும், சத்தியத்தை மக்கள் முன் தெளிவாக எடுத்து வைக்கவும் நாங்கள் என்றுமே தயங்கப் போவதில்லை. எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ் நம் அனைவருக்கும் தவற்றைத் தவறாக விளங்கி அவற்றை விட்டுத் தவிர்த்துக் கொள்ளவும், உண்மையை உண்மையாக விளங்கி அதன்படிச் செயல் படவும் அருள் புரிவானாக. ஆமீன்.